**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 96** **நாள்: 13.07.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பாலவாக்கம் கடற்கரை மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் சிறப்பு தூய்மை பணி முகாம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக நோய்த்தடுப்பு மற்றும் தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி, இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் இணைந்து, சமுதாய பொறுப்பு திட்டத்தின் கீழ் பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட பாலவாக்கம் கடற்கரை மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் நடைபெற்ற சிறப்பு தூய்மைப்பணி முகாமை பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (கல்வி) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.07.2018) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இம்முகாமில், திருவான்மியூர் சென்னை மேல்நிலைப்பள்ளி, அன்னை வேளாங்கண்ணி மேல்நிலைப்பள்ளி, ஏஞ்சல்பேபி பள்ளி மற்றும் குமார ராணி மீனா முத்தையா கல்லூரியை சேர்ந்த 300 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர்களுக்கு தூய்மை இந்தியா திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, அனைவரும் தூய்மை இந்தியா உறுதிமொழி எடுத்து கொண்டனர். பின்னர், கடற்கரை மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் உள்ள பிளாஸ்டிக் மற்றும் மற்றக் குப்பைகள் அகற்றப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், இந்தியன் ஆயில் நிறுவன தென்னிந்திய செயல் இயக்குநர் டி.எஸ்.நானவேர், சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி. சீனிவாசன், தேசிய பசுமைப் படை ஒருங்கிணைப்பாளர், பாலவாக்கம் கடற்கரை நடைப்பயிற்சி மேற்கொள்வோர் சங்க நிர்வாகிகள், ஆசிரியப் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**